**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.**

Case No. S.C. No. 133/2022
Prosecution side witness for P.W.1

| | | | |
|---|---|---|---|
| Name | ... திருமதி. பேச்சியம்மாள். | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **15.04.2026**
A1, A3, A4 are present. A2, A5, A7 are absent, U/s. 317 Cr.P.C. petition filed and allowed.

<u>**முதல் விசாரணை:-**</u>

நான் கடந்த 14 வருடங்களாக தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி வீரவாஞ்சி நகர் 7 வது தெருவில் குடியிருந்து வருகிறேன். இந்த வழக்கில் கொலையுண்டு இறந்துபோன மணி எனது கணவர் ஆவார். எனது கணவர் வீரவாஞ்சிநகரில் ஆடு, மாடு வைத்து பால் கறந்து தொழில் செய்து வந்தார். எங்களுக்கு ஒரு ஆண், பெண் என 2 பிள்ளைகள் உள்ளனர். எனது மகள் பெயர் முத்துபேச்சி, எனது மகன் பெயர் நயினார். எனது மகள் எனது கணவர் கொலையுண்டு இறந்த நேரத்தில் கல்லூரியில் படித்துமுடித்துவிட்டு ஆவின் பால் கம்பெனியில் வேலை செய்து வந்தாள். எனது கணவருக்கு பூர்வீகம் கங்கைகொண்டானில் உள்ள வடகரை என்ற ஊர் ஆகும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. மற்ற எதிரிகளான சுபாஷ், இசக்கிதுரை, நம்பிராஜ் ஆகியோர்களை தெரியாது. எனது கணவர் இறப்பதற்கு முன்பு எனது கணவருடன் சேர்ந்து 4 பேர்கள் மீது கொலை கேஸ் இருந்தது. யாரையோ கொலை செய்ததாக கேஸ் போட்டிருந்தார்கள்.

எனது கணவருக்கும், ஆஜர் எதிரிகளுக்கும் எந்த பிரச்சனையும் இல்லை. எனது கணவர் கொலை வழக்கு சம்மந்தமாக நான் எனக்கு என்ன தெரியும் என்று கேட்டால் நான் எனது கணவரை கொலை சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை, எனது கணவரை வெட்டிவிட்டதாக பக்கத்தில் உள்ளவர்கள் சொல்லக்கேட்டு கோவில்பட்டி அரசுமருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். அங்கே எனது கணவரை பார்த்தேன். உள்ளே சென்று பார்க்கவில்லை. ஆனால் எனது கணவர் இறந்துவிட்டதாக சொன்னார்கள். எனது கணவர் எப்படி இறந்தார், யாரால் வெட்டி கொலை செய்யப்பட்டார் என்றும், எதற்காக வெட்டி கொலை செய்யப்பட்டார் என்று கேள்விப்பட்டனே என்றால் இல்லை. எனது கணவர் இறந்த அன்று என்ன ஆடைகள் அணிந்திருந்தார் என்றும் எனக்கு தெரியாது. எனது கணவர் கொலை வழக்கு சம்மந்தமாக அடையாள அணிவகுப்பு ஜெயிலில் காண்பித்தேன். போலீசார் போட்டோவை காண்பித்ததால் சொன்னேன். இதற்கு முன்பாக எனது கணவரின் கொலை சம்மந்தமாக கோவில்பட்டி கோர்ட்டில் சாட்சியமளிக்க சென்றுள்ளேன். எனது கணவர் கொலை சம்மந்தமாக போலீஸ் ஸ்டேசனுக்கு நாங்கள் புகார் கொடுக்க செல்லவில்லை. ஆஸ்பத்திரியில் வைத்து போலீசார் கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் புகார்மனுவில் உள்ள பேச்சியம்மாள் என்ற கையெழுத்து என்னுடையதுதான். அது நான் போட்டதுதான். அந்த கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.1** ஆகும். போலீசார் என்னிடம் கேட்டுக்கொண்டதன்பேரில் வெள்ளை பேப்பரில் கையெழுத்து போட்டுக்கொடுத்தேன். போலீசார் படித்து காண்பித்தார்கள். அதில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது. என்னுடன் சேர்ந்து என் மகளும் அதில் கையெழுத்து செய்தார். என்னிடம் காட்டப்படும் 164 குவிமுச வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து நான் போட்டதுதான், கோவில்பட்டி

நீதிமன்றத்தில் இதற்கு முன்பு சாட்சி சொல்லும்போது போட்டுக்கொடுத்ததாகும் அந்த கையெழுத்துமட்டும் **அ.சா.ஆ–2** ஆகும். கோவில்பட்டி நீதிமன்றத்தில் நான், முத்துபாண்டி, சுடலை என்பவர்களும் சாட்சி சொல்ல சென்றிருந்தோம். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை. இந்த வழக்கு சம்மந்தமாக வேறு ஒன்றும் தெரியாது, நான் எந்த சம்பவத்தையும் நேரில் பார்க்கவில்லை, அதனால் தெரியாது.

**(இந்நிலையில் சாட்சி வாக்குமூலத்திற்கு மாறுபாடாக சாட்சியமளித்ததால், அரசு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி சாட்சி பிறழ் சாட்சியாக கருதபட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன்பேரில் அனுமதிக்கப்பட்டது.)**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலீசார் விசாரித்தார்கள் என்றும், போலீசார் விசாரணையின்போது, கடந்த 2010 ஆம் ஆண்டு நாங்கள் வடகரையில் வசித்து வந்தபோது நிலத்தகராறு சம்மந்தமாக கங்கைகொண்டான் அருகே உள்ள அனைத்தலையூர் கிராமத்தை சேர்ந்த 3ம் எதிரி உய்க்காட்டான் மகனை கொலை செய்த வழக்கில் எனது கணவர் சம்மந்தப்பட்டு ஜெயிலுக்கு போனார் என்றும், அதன்பின்னர் உய்க்காட்டான் குடும்பத்திற்கு பயந்து நானும், எனது கணவரும், பிள்ளைகளுடன் வீட்டை காலி செய்து குடும்பத்துடன் எனது அம்மாவின் பூர்வீக ஊரான கோவில்பட்டி வீரவாஞ்சிநகருக்கு மேற்படி முகவரியில் ஒரு வீடு வாடகைக்கு பிடித்து வசித்து வந்தோம் என்றும், அங்கு வைத்து எனது கணவர் ஆடுகளும், மாடுகளும் வாங்கி அதில் பால் கறந்து விற்று வாழ்ந்து வந்தோம் என்றும், பின்னர் கொஞ்சம் பணம் வந்ததும், வீரவாஞ்சிநகர் 9 வது தெருவில் ஒரு இடம் வாங்கி ஆட்டுக்கு செட் அமைத்தும், மாடுகளை கட்டி இருந்தோம் என்றும், எனது கணவர் சம்மந்தப்பட்ட கொலை வழக்கு அவர் இறப்பதற்கு 4 வருடங்களுக்கு முன்பு விடுதலையாகிவிட்டது என்றும், உய்க்காட்டான் மகனை கொலை செய்த வழக்கில் சம்மந்தப்பட்ட எனது கணவருடன்சேர்ந்த 4 பேர்களை உய்க்காட்டான் மற்றும் அவரின் சகோதரி சுதாவின் மகன் 1ம் எதிரி சூர்யாதினேஷ் ஆகியோர்கள் கொலை செய்துவிட்டார்கள் என்றும், இந்நிலையில் உய்க்காட்டான் மகன் துரையும், சூர்யாதினேஷ்–ம், மீதியிருந்த எனது கணவரை பழிக்குப்பழியாக கொலை செய்த திட்டமிட்டு கோவில்பட்டி வீரவாஞ்சிநகர் பகுதியில் வந்து எங்களை பற்றியும், நாங்கள் எங்கு வசித்து வருகிறோம் என்பதை பற்றியும் விசாரித்ததாக எங்களுக்கு அறிமுகமானவர்கள் சொல்லி நானும், எனது கணவரும் அறிந்தோம் என்றும், எனது கணவர் கொலை செய்யப்பட்டு இறப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு என்னிடம் சொல்லும்போது எனது போட்டோவையும், அட்ரஸையும் யாரோ கங்கைகொண்டார் அனைத்தலையூர் உய்க்காட்டன் தங்கை மகன் 1ம் எதிரி

சூர்யாதினேஷ்க்கு கொடுத்ததாக தகவல் அறிந்து என்னிடம் சொன்னார் என்றும், அதிலிருந்து உய்க்காட்டான் குடும்பத்தினர் ஏதோ என்னை செய்ய போகிறார்கள் என்று என்னிடம் சொல்லி வருத்தப்பட்டார் என்றும், அதற்கு நான் எனது கணவரிடம் வெளியூருக்கு வேலைக்கு போய் விடுகிறீர்களா என்று கேட்டேன் என்றும், அதற்கு என் கணவர் என்னிடம் ஆடு, மாடுகளை விட்டுவிட்டு நான் மட்டும் வெளியூருக்கு போக முடியும், பிள்ளைகளை வைத்து நீதான் கஷ்டப்படுவாய் என்று என்னிடம் சொன்னார் என்றும், அதற்கு நான் கணவரிடம் சரி கவனமாக இருங்கள் என்று சொல்லியிருந்தேன் என்றும், இந்நிலையில் 25.03.2022 ஆம் தேதி வீரவாஞ்சிநகர் 9 வது தெருவில் உள்ள எங்களுக்கு சொந்தமான இடத்தில் மாட்டுதொழுவத்தில் பால் கறப்பதற்கு நானும், எனது கணவரும் சென்றோம் என்றும், அப்போது பார்த்தால் அடையாளம் காட்டக்கூடிய 2 நபர்கள் எங்கள் தொழுவத்திற்கு கிழக்கிலிருந்து ஒருவரும், மேற்கிலிருந்து ஒருவரும் கையில் அரிவாளுடன் ஓடிவந்தார்கள் என்றும், அதை பார்த்த எனது கணவர் அவர்களிடமிருந்து தப்பிக்க ஓடினார்ள ன்றும், அப்போது மேற்கிலிருந்து வந்த நபர் கையில் வைத்திருந்த அரிவாளால் எனது கணவரை முதுகில் வெட்டினார் என்றும், எனது கணவர் அந்த வெட்டை இடது கையால் தடுத்ததும், அவரது இடது கை மணிக்கட்டிற்கு மேல் வெட்டுப்பட்டு துண்டாகி கீழே விழுந்தது என்றும், மறுபடியும் அவன் வெட்டும்போது எனது கணவர் வலது கையால் தடுத்தபோது மாறி மாறி வலது கையில் வெட்டினார் என்றும், அப்போது கிழக்கிலிருந்து வந்த நபர் கையில் வைத்திருந்த அரிவாளால் எனது கணவரின் தலை, கழுத்து, தோள்பட்டை ஆகிய இடங்களில் மாறி மாறி வெட்டினார் என்றும், எனது கணவர் இரத்தம் சிந்தி மாட்டுத்தொழுவத்தின் அருகே விழுந்தார் என்றும், நான் மேற்படி நபர்களின் காலைப்பிடித்து எனது கணவரை வெட்டாதீர்கள், வெட்டாதீர்கள் என்று கெஞ்சினேன் என்றும், அதையும் மீறி வெட்டி எனது கணவரை கொன்றுவிட்டார்கள் என்றும், எனது கணவரின் அலறல் சத்தம் கேட்டு அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் பக்கத்தில் உள்ளவர்களும், அங்கு கட்டிடம் கட்டிக்கொண்டிருந்த கொத்தனார்கள் சுடலைபாண்டியன், மற்றும் மாரிமுத்து அவருடன் வேலை செய்தார்கள் ஓடி வந்து சத்தம் போட்டதும், அவர்களையும் அந்த இருவர் அரிவாளை காட்டி மிரட்டிவிட்டு அரிவாளுடன் மெயின்ரோட்டை பார்த்து ஓடி இருசக்கரவாகனத்தில் தப்பி சென்றுவிட்டார்கள் என்றும், அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் தகவல் சொல்லி வந்த கோவில்பட்டி மேற்கு காவல்நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் எனது கணவரின் இறந்த உடலை தனியார் ஆம்புலன்சில் ஏற்றிக்கொண்டு கோவில்பட்டி அரசுமருத்துவமனைக்கு கொண்டு சென்றார் என்றும், எங்களுக்கு உய்க்காட்டான் குடும்பத்தை தவிர வேறு எதிரிகள் யாரும் கிடையாது என்றும், அவர்கள்தான் அவரது மகனை கொலை செய்த நபர்களை எல்லோரையும் கொன்றுவிட்டு மீதியிருந்த எனது கணவரையும் கடைசியாக நோட்டமிட்டு கொலை செய்துவிட்டார்கள் என்றும், எனது கணவரை கொலை செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி நானும் எனது மகள் முத்துபேச்சியும் கோவில்பட்டி மேற்கு காவல்நிலையம் வந்து எனது மகளை

வைத்து நான் புகார் மனு எழுதிக்கொடுத்தேன் என்றும், நான் கொடுத்த புகார்மனுவில் எனது மகள் முத்துபேச்சி அறிவேன் சாட்சியாககையொப்பம் செய்தார் என்றும், அதில் நானும் கையெழுத்து செய்து கொடுத்தேன் என்றும் அதுதான் அ.சா.ஆ–1 என்றும், எனது கணவரை கொலை செய்துவிட்டு ஓடியவர்களில் கங்கைகொண்டானை சேர்ந்த எனது கணவர் குடும்பத்திற்கு எதிரியான 3ம் எதிரி உய்க்காட்டானின் சகோதரியான இசக்கியம்மாள் என்ற சுதாவின் மகன் 1ம் எதிரி சூர்யா தினேஷ் என்பவரும், அவருடன் பார்த்தால் அடையாளம் தெரியக்கூடிய ஒரு நபருமாக எனது கணவரை வெட்டி கொன்றுவிட்டு UPMS பள்ளி வழியாக கிருஷ்ணாநகர் ஹாக்கி கிரவுண்ட் வழியாக தப்பி சென்றதாக அறிந்தேன் என்றும், பின்னர் எனது கணவர் கொலை சம்மந்தமாக கோவில்பட்டி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நீதிபதி முன்னிலையில் வாக்குமூலம் கொடுத்தேன் என்றும் அந்த வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்துதான் அ.சா.ஆ–2 என்றும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளும் நாங்களும் சமாதானம் ஆகிவிட்டபடியினால் அவர்களை காப்பாற்ற வேண்டி உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

<u>குறுக்குவிசாரணை (எதிரிகள்தரப்பில்)</u>

கோவில்பட்டி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நான் சாட்சியம் சொல்ல போகும்போது போலீசார் எவ்வாறு சாட்சியம் சொல்ல வேண்டும் என்றும், என்ன சொல்ல வேண்டும் என்றும் சொல்லிக்கொடுத்ததன்பேரில் சாட்சியமளித்தேன் என்றுசொன்னால் சரிதான்.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District& Sessions Judge,
Thoothukudi.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.**

Case No. S.C. No. 133/2022
Prosecution side witness for P.W.2

| | | | |
|---|---|---|---|
| Name | ... செல்வி. முத்துபேச்சி | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **15.04.2026**
A1, A3, A4 are present. A2, A5, A7 are absent, U/s. 317 Cr.P.C. petition filed and allowed.

**முதல் விசாரணை:-**

நான் கடந்த 14 வருடங்களாக தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி வீரவாஞ்சி நகர் 7 வது தெருவில் குடியிருந்து வருகிறோம். இந்த வழக்கில் கொலையுண்டு இறந்துபோன மணி எனது அப்பா ஆவார். எனது அப்பா வீரவாஞ்சிநகரில் ஆடு, மாடு வைத்து பால் கறந்து தொழில் செய்து வந்தார். என்னுடன் பிறந்தது எனது தம்பி. தம்பி பெயர் நயினார். நான் எனது அப்பா கொலையுண்டு இறந்த நேரத்தில் கல்லூரியில் படித்துமுடித்துவிட்டு ஆவின் பால் கம்பெனியில் வேலை செய்து வந்தேன். எனது அப்பாவிற்கு பூர்வீகம் கங்கைகொண்டானில் உள்ள வடகரை என்ற ஊர் ஆகும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. மற்ற எதிரிகளான சுபாஷ், இசக்கிதுரை, நம்பிராஜ் ஆகியோர்களை தெரியாது. எனது அப்பா இறப்பதற்கு முன்பு நான் சிறுபிள்ளையாக இருந்தபோது என் அப்பாவை சேர்ந்து 4 பேர்கள் மீது யாரையோ கொன்ற கேஸ் இருந்தது. யாரையோ கொலை செய்ததாக கேஸ் போட்டிருந்தார்கள். எனது

அப்பாவிற்கும், ஆஜர் எதிரிகளுக்கும் எந்த பிரச்சனையும் இல்லை. எனது அப்பா கொலை வழக்கு சம்மந்தமாக நான் எனக்கு என்ன தெரியும் என்று கேட்டால் நான் எனது அப்பாவின் கொலை சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை, எனது அப்பாவை வெட்டிவிட்டதாக என் அம்மா போன் பண்ணி தகவல் சொன்னார். நானும், எனது அம்மாவும் கோவில்பட்டி அரசுமருத்துவமனைக்கு சென்று பார்த்தோம். நான் பார்த்தபோது எனது அப்பாவிற்கு கை, கால்களில் வெட்டப்பட்டிருந்தது, உடம்பில் வெட்டுக்காயங்கள் இருந்தது. எனது அப்பா எப்படி இறந்தார், யாரால் வெட்டி கொலை செய்யப்பட்டார் என்றும், எதற்காக வெட்டி கொலை செய்யப்பட்டார் என்று கேள்விப்பட்டனே என்றால் இல்லை. எனக்கு ஒன்றும் தெரியாது. எனது அப்பா இறந்த அன்று என்ன ஆடைகள் அணிந்திருந்தார் என்றும் எனக்கு தெரியாது. எனது அப்பா கொலை வழக்கு சம்மந்தமாக அடையாள அணிவகுப்பு ஜெயிலில் காண்பிக்க நான் செல்லவில்லை. இதற்கு முன்பாக எனது அப்பாவின் கொலை சம்மந்தமாக கோவில்பட்டி கோர்ட்டில் சாட்சியமளிக்க சென்றுள்ளேனா என்றால் இல்லை. எனது அப்பா கொலை சம்மந்தமாக போலீஸ் ஸ்டேசனுக்கு நாங்கள் புகார் கொடுக்க செல்லவில்லை. ஆஸ்பத்திரியில் வைத்து போலீசார் கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் புகார்மனுவில் உள்ள அறிவேன் சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். அது நான் போட்டதுதான். அந்த கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.3** ஆகும். போலீசார் என்னிடம் கேட்டுக்கொண்டதன்பேரில் வெள்ளை பேப்பரில் கையெழுத்து போட்டுக்கொடுத்தேன். போலீசார் படித்து காண்பிக்கவில்லை. அதில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது. ஏனென்றால் வெற்று பேப்பரில்தான் கையெழுத்து வாங்கினார்கள். என்னுடன் சேர்ந்து என் அம்மாவும் அதில் கையெழுத்து

செய்தார். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை. இந்த வழக்கு சம்மந்தமாக வேறு ஒன்றும் தெரியாது, நான் எந்த சம்பவத்தையும் நேரில் பார்க்கவும் இல்லை, கேள்விப்படவும் இல்லை, அதனால் தெரியாது.

**(இந்நிலையில் சாட்சி வாக்குமூலத்திற்கு மாறுபாடாக சாட்சியமளித்ததால், அரசு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி சாட்சி பிறழ் சாட்சியாக கருதபட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன்பேரில் அனுமதிக்கப்பட்டது.)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரித்தார்கள் என்றும், போலீசார் விசாரணையின்போது, கடந்த 2010 ஆம் ஆண்டு நாங்கள் வடகரையில் வசித்து வந்தபோது நிலத்தகராறு சம்மந்தமாக கங்கைகொண்டான் அருகே உள்ள அனைத்தலையூர் கிராமத்தை சேர்ந்த 3ம் எதிரி உய்க்காட்டான் மகனை கொலை செய்த வழக்கில் எனது அப்பா சம்மந்தப்பட்டு ஜெயிலுக்கு போனார் என்றும், அதன்பின்னர் உய்க்காட்டான் குடும்பத்திற்கு பயந்து நாங்களும், எனது அம்மாவும், தம்பியும், என் அப்பாவுடன் வீட்டை காலி செய்து குடும்பத்துடன் எனது அம்மாவின் பூர்வீக ஊரான கோவில்பட்டி வீரவாஞ்சிநகருக்கு மேற்படி முகவரியில் ஒரு வீடு வாடகைக்கு பிடித்து வசித்து வந்தோம் என்றும், அங்கு வைத்து எனது அப்பா ஆடுகளும், மாடுகளும் வாங்கி அதில் பால் கறந்து விற்று வாழ்ந்து வந்தோம் என்றும், பின்னர் கொஞ்சம் பணம் வந்ததும், வீரவாஞ்சிநகர் 9 வது தெருவில் ஒரு இடம் வாங்கி ஆட்டுக்கு செட் அமைத்தும், மாடுகளை கட்டி இருந்தோம் என்றும், எனது அப்பா சம்மந்தப்பட்ட கொலை வழக்கு அவர் இறப்பதற்கு 4 வருடங்களுக்கு முன்பு விடுதலையாகிவிட்டது என்றும், உய்க்காட்டான் மகனை கொலை செய்த வழக்கில் சம்மந்தப்பட்ட எனது அப்பாவுடன் சேர்ந்த 4 பேர்களை உய்க்காட்டான் மற்றும் அவரின் சகோதரி சுதாவின் மகன் 1ம் எதிரி சூர்யாதினேஷ் ஆகியோர்கள் கொலை செய்துவிட்டார்கள் என்றும், இந்நிலையில் உய்க்காட்டான் மகன் துரையும், சூர்யாதினேஷ்-ம், மீதியிருந்த எனது அப்பாவை பழிக்குப்பழியாக கொலை செய்த திட்டமிட்டு கோவில்பட்டி வீரவாஞ்சிநகர் பகுதியில் வந்து எங்களை

பற்றியும், நாங்கள் எங்கு வசித்து வருகிறோம் என்பதை பற்றியும் விசாரித்ததாக எங்களுக்கு அறிமுகமானவர்கள் சொல்லி நானும், எனது அம்மாவின் மூலம் அறிந்தோம் என்றும், எனது அப்பா கொலை செய்யப்பட்டு இறப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு என் அம்மாவிடம் சொல்லும்போது எனது அப்பாவின் போட்டோவையும், அட்ரஸையும் யாரோ கங்கைகொண்டார் அனைத்தலையூர் உய்க்காட்டன் தங்கை மகன் 1ம் எதிரி சூர்யாதினேஷ்க்கு கொடுத்ததாக தகவல் அறிந்து என் அம்மாவிடம் சொன்னார் என்றும், அதிலிருந்து உய்க்காட்டான் குடும்பத்தினர் ஏதோ என்னை செய்ய போகிறார்கள் என்று என் அம்மாவிடம் சொல்லி வருத்தப்பட்டார் என்றும், அதற்கு என் அம்மா எனது அப்பாவிடம் வெளியூருக்கு வேலைக்கு போய் விடுகிறீர்களா என்று கேட்டார் என்றும், அதற்கு என் அப்பா என் அம்மாவிடம் ஆடு, மாடுகளை விட்டுவிட்டு நான் மட்டும் வெளியூருக்கு போக முடியும், பிள்ளைகளை வைத்து நீதான் கஷ்டப்படுவாய் என்று என் அம்மாவிடம் சொன்னார் என்றும், அதற்கு என் அம்மா, என் அப்பாவிடம் சரி கவனமாக இருங்கள் என்று சொல்லியிருந்தார் என்றும், இந்நிலையில் 25.03.2022 ஆம் தேதி வீரவாஞ்சிநகர் 9 வது தெருவில் உள்ள எங்களுக்கு சொந்தமான இடத்தில் மாட்டுதொழுவத்தில் பால் கறப்பதற்கு எனது அம்மாவும், அப்பாவும் சென்றிருந்தபோது, அப்போது பார்த்தால் அடையாளம் காட்டக்கூடிய 2 நபர்கள் எங்கள் தொழுவத்திற்கு கிழக்கிலிருந்து ஒருவரும், மேற்கிலிருந்து ஒருவரும் கையில் அரிவாளுடன் ஓடிவந்தார்கள் என்றும், அதை பார்த்த எனது அப்பா அவர்களிடமிருந்து தப்பிக்க ஓடியுள்ளார் என்றும், அப்போது மேற்கிலிருந்து வந்த நபர் கையில் வைத்திருந்த அரிவாளால் எனது அப்பாவை முதலில் வெட்டினார் என்றும், எனது அப்பா அந்த வெட்டை இடது கையால் தடுத்ததும், அவரது இடது கை மணிக்கட்டிற்கு மேல் வெட்டுப்பட்டு துண்டாகி கீழே விழுந்தது என்றும், மறுபடியும் அவன் வெட்டும்போது எனது அப்பா வலது கையால் தடுத்தபோது மாறி மாறி வலது கையில் வெட்டினார் என்றும், அப்போது கிழக்கிலிருந்து வந்த நபர் கையில் வைத்திருந்த அரிவாளால் எனது அப்பாவின் தலை, கழுத்து, தோள்பட்டை

ஆகிய இடங்களில் மாறி மாறி வெட்டினார் என்றும், எனது அப்பா இரத்தம் சிந்தி மாட்டுத்தொழுவத்தின் அருகே விழுந்துவிட்டார் என்றும், என் அம்மா மேற்படி நபர்களின் காலைப்பிடித்து எனது கணவரை வெட்டாதீர்கள், வெட்டாதீர்கள் என்று கெஞ்சியுள்ளார் என்றும், அதையும் மீறி வெட்டி எனது அப்பாவை கொன்றுவிட்டார்கள் என்றும், எனது அப்பாவின் அலறல் சத்தம் கேட்டு அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் பக்கத்தில் உள்ளவர்களும், அங்கு கட்டிடம் கட்டிக்கொண்டிருந்த கொத்தனார்கள் சுடலைபாண்டியன், மற்றும் மாரிமுத்து அவருடன் வேலை செய்தார்கள் ஓடி வந்து சத்தம் போட்டதும், அவர்களையும் அந்த இருவர் அரிவாளை காட்டி மிரட்டிவிட்டு அரிவாளுடன் மெயின்ரோட்டை பார்த்து ஓடி இருசக்கரவாகனத்தில் தப்பி சென்றுவிட்டார்கள் என்றும் என் அம்மா எனக்கு போன் செய்து தகவல் சொன்னதும், உடனே நான் வந்து எங்கள் மாட்டுத்தொழுவத்தில் இறந்த நிலையில் கிடந்த என் அப்பாவின் உடலை பார்த்தேன் என்றும், அங்கு என் அப்பாவின் இடது கை மணிக்கட்டிற்கு மேல் துண்டாகியும், வலது கை முட்டிற்கு கீழ் முழுவதுமாக வெட்டுப்பட்டு இடது பக்க தலை, கழுத்தில் வெட்டுக்காயம் பட்டும், தோள்பட்டையில் பலத்த வெட்டுக்காயம்பட்டும் இரத்தம் சிந்தி என் அப்பா இறந்த நிலையில் கிடந்தார் என்றும், அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் தகவல் சொல்லி வந்த கோவில்பட்டி மேற்கு காவல்நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் எனது அப்பாவின் இறந்த உடலை தனியார் ஆம்புலன்சில் ஏற்றிக்கொண்டு கோவில்பட்டி அரசுமருத்துவமனைக்கு கொண்டு சென்றார் என்றும், எங்களுக்கு உய்க்காட்டான் குடும்பத்தை தவிர வேறு எதிரிகள் யாரும் கிடையாது என்றும், அவர்கள்தான் எனது அப்பா, அவரது மகனை கொலை செய்த நபர்களை எல்லோரையும் கொன்றுவிட்டு மீதியிருந்த எனது அப்பாவையும் கடைசியாக நோட்டமிட்டு கொலை செய்துவிட்டார்கள் என்றும், எனது அப்பாவை கொலை செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி நானும் எனது அம்மா பேச்சியம்மாளும் கோவில்பட்டி மேற்கு காவல்நிலையம் வந்து என் அம்மா சொல்ல சொல்ல நான் எழுதி புகார் மனு எழுதிக்கொடுத்தோம் என்றும், நாங்கள்

கொடுத்த புகார்மனுவில் நான் அறிவேன் சாட்சியாககையொப்பம் செய்தேன் என்றும், அதில் என் அம்மாவும் கையெழுத்து செய்து கொடுத்தார் என்றும் நான் போட்ட கையெழுத்துதான் அ.சா.ஆ–3 என்றும், எனது அப்பாவை கொலை செய்துவிட்டு ஓடியவர்களில் கங்கைகொண்டானை சேர்ந்த எனது அப்பாவின் குடும்பத்திற்கு எதிரியான 3ம் எதிரி உய்க்காட்டானின் சகோதரியான இசக்கியம்மாள் என்ற சுதாவின் மகன் 1ம் எதிரி சூர்யா தினேஷ் என்பவரும், அவருடன் பார்த்தால் அடையாளம் தெரியக்கூடிய ஒரு நபருமாக எனது அப்பாவை வெட்டி கொன்றுவிட்டு UPMS பள்ளி வழியாக கிருஷ்ணாநகர் ஹாக்கி கிரவுண்ட் வழியாக தப்பி சென்றதாக அறிந்தோம் என்றும், போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளும் நாங்களும் சமாதானம் ஆகிவிட்டபடியினால் அவர்களை காப்பாற்ற வேண்டி உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

<u>குறுக்குவிசாரணை (எதிரிகள்தரப்பில் இல்லை என சொல்லப்பட்டது.)</u>

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District & Sessions Judge,
Thoothukudi.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.**

Case No. S.C. No. 133/2022
Prosecution side witness for P.W.3

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு.முத்தையா என்ற முத்துப்பாண்டி | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **15.04.2026**
A1, A3, A4 are present. A2, A5, A7 are absent, U/s. 317 Cr.P.C. petition filed and allowed.

**<u>முதல் விசாரணை:–</u>**

நான் பிறந்தது முதல் தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி வீரவாஞ்சி நகர் 7 வது தெருவில் குடியிருந்து வருகிறேன். இந்த வழக்கில் கொலையுண்டு இறந்துபோன மணி எனது மச்சான் ஆவார். எனது அக்கா பேச்சியம்மாளின் கணவர் ஆவார். எனது அக்காவும், மச்சானும் குடும்பத்துடன் வீரவாஞ்சிநகரில் ஆடு, மாடு வைத்து பால் கறந்து தொழில் செய்து வந்தார். எனது அக்காவிற்கு 2 பிள்ளைகள், ஒரு ஆண், பெண் உள்ளனர். எனது மச்சான் மணிக்கு பூர்வீகம் கங்கைகொண்டானில் உள்ள வடகரை என்ற ஊர் ஆகும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. மற்ற எதிரிகளான சுபாஷ், இசக்கிதுரை, நம்பிராஜ் ஆகியோர்களை தெரியாது. எனது மச்சான் இறப்பதற்கு முன்பு என் மச்சானை சேர்ந்து 4 பேர்கள் மீது யாரையோ கொன்ற கேஸ் இருந்தது. யாரையோ கொலை செய்ததாக கேஸ் போட்டிருந்தார்கள். எனது மச்சானிற்கும், ஆஜர்

எதிரிகளுக்கும் எந்த பிரச்சனையும் இருந்ததா என்றால் அது பற்றி தெரியாது. எனது மச்சான் கொலை வழக்கு சம்மந்தமாக எனக்கு என்ன தெரியும் என்று கேட்டால் நான் எனது மச்சானின் கொலை சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை, எனது மச்சானை வெட்டிவிட்டதாக வீரவாஞ்சிநகரில் உள்ளவர்கள் போன் பண்ணி தகவல் சொன்னார்கள். அதன்பிறகு நான் அங்கு சென்று பார்த்தேன். நான் கோவில்பட்டி அரசுமருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். நான் உள்ளே சென்று பார்க்கவில்லை, அதனால் எனது மச்சானிற்கு எங்கு எங்கு காயங்கள் இருந்தது என்று எனக்கு தெரியாது. எனது மச்சான் மணி எப்படி இறந்தார், யாரால் வெட்டி கொலை செய்யப்பட்டார் என்றும், எதற்காக வெட்டி கொலை செய்யப்பட்டார் என்று கேள்விப்பட்டனே என்றால் இல்லை. எனக்கு ஒன்றும் தெரியாது. நான் எதையும் நேரில் பார்க்கவில்லை, எதையும் கேள்விப்படவும் இல்லை. எனது மச்சான் கொலை வழக்கு சம்மந்தமாக அடையாள அணிவகுப்பு ஜெயிலில் காண்பிக்க நான் செல்லவில்லை. இதற்கு முன்பாக எனது மச்சான் கொலை சம்மந்தமாக கோவில்பட்டி கோர்ட்டில் சாட்சியமளிக்க சென்றுள்ளேனா என்றால் சென்றேன். அங்கு என்னிடம் வாக்குமூலம் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையதுதான். அது நான் போட்டதுதான். அந்த கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.4** ஆகும். நான் எப்போதும் முத்தையா என்றுதான் கையெழுத்து போடுவேன். என்னுடன் கோவில்பட்டி கோர்ட்டிற்கு வந்திருந்தார் என்றால் எனது அக்கா, சுடலைபாண்டியனும் வந்திருந்தார். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை. இந்த வழக்கு சம்மந்தமாக வேறு ஒன்றும் தெரியாது,

நான் எந்த சம்பவத்தையும் நேரில் பார்க்கவும் இல்லை, கேள்விப்படவும் இல்லை, அதனால் தெரியாது.

**(இந்நிலையில் சாட்சி வாக்குமூலத்திற்கு மாறுபாடாக சாட்சியமளித்ததால், அரசு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி சாட்சி பிறழ் சாட்சியாக கருதபட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன்பேரில் அனுமதிக்கப்பட்டது.)**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலீசார் விசாரித்தார்கள் என்றும், போலீசார் விசாரணையின்போது, கடந்த 2010 ஆம் ஆண்டு என் மச்சான் மணி இருக்கும்போது குத்தகைக்கு விவசாயம் பார்த்த இடத்தை அனைத்தலையூர் கிராமத்தை சேர்ந்த 3ம் எதிரி உய்க்காட்டான் என்பவர் அந்த இடத்தை உரிமையாளரிடம் நிலத்தை கிரையம் பெற்றதாகவும், அதனால் உய்க்காட்டானுக்கும், மச்சான் மணிக்கும் மேற்படி நிலத்தை காலிசெய்வதில் பிரச்சனை ஏற்பட்டு எனது மச்சான் மணியும், அவரது குடும்பத்தார்களும் உய்க்காட்டான் மகன் அய்யாபிள்ளையை கொலை செய்துவிட்டார்கள் என்றும், அதன்பின்னர் உய்க்காட்டான் குடும்பத்திற்கு பயந்து எனது மச்சானும், எனது அக்காவும் வீட்டை காலி செய்து குடும்பத்துடன் எனது அம்மாவின் பூர்வீக ஊரான கோவில்பட்டி வீரவாஞ்சிநகருக்கு மேற்படி முகவரியில் ஒரு வீடு வாடகைக்கு பிடித்து வசித்து வந்தார்கள் என்றும், அங்கு வைத்து எனது அக்காவும், மச்சானும் ஆடுகளும், மாடுகளும் வாங்கி அதில் பால் கறந்து விற்று வாழ்ந்து வந்தார்கள் என்றும், பின்னர் கொஞ்சம் பணம் வந்ததும், வீரவாஞ்சிநகர் 9 வது தெருவில் ஒரு இடம் வாங்கி ஆட்டுக்கு செட் அமைத்தும், மாடுகளை கட்டி இருந்தார்கள் என்றும், எனது மச்சான் சம்மந்தப்பட்ட கொலை வழக்கு அவர் இறப்பதற்கு 4 வருடங்களுக்கு முன்பு விடுதலையாகிவிட்டது என்றும், உய்க்காட்டான் மகனை கொலை செய்த வழக்கில் சம்மந்தப்பட்ட எனது மச்சானுடன் சேர்ந்த 4 பேர்களை உய்க்காட்டான் மற்றும் அவரின் சகோதரி சுதாவின் மகன் 1ம் எதிரி சூர்யாதினேஷ் ஆகியோர்கள் கொலை செய்துவிட்டார்கள் என்றும், இந்நிலையில் உய்க்காட்டான் மகன் துரையும்,

சூர்யாதினேஷ்–ம், மீதியிருந்த எனது மச்சானை பழிக்குப்பழியாக கொலை செய்த திட்டமிட்டு கோவில்பட்டி வீரவாஞ்சிநகர் பகுதியில் வந்து அவர்களை பற்றியும், அவர்கள் எங்கு வசித்து வருகிறார்கள் என்பதை பற்றியும் விசாரித்ததாக அவர்களுக்கு அறிமுகமானவர்கள் சொல்லி எனது அக்காவும், எனது மச்சானும் நானும், அறிந்தேன் என்றும், எனது மச்சான் கொலை செய்யப்பட்டு இறப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு என் அக்காவிடம் எனது மச்சான் சொல்லும்போது எனது மச்சானின் போட்டோவையும், அட்ரஸையும் யாரோ கங்கைகொண்டான் அனைத்தலையூர் உய்க்காட்டன் தங்கை மகன் 1ம் எதிரி சூர்யாதினேஷ்க்கு கொடுத்ததாக தகவல் அறிந்து என் அக்காவிடம் எனது மச்சான் சொன்னார் என்றும், அதிலிருந்து உய்க்காட்டான் குடும்பத்தினர் மச்சானை ஏதோ செய்ய போகிறார்கள் என்று என் அக்காவிடம் சொல்லி வருத்தப்பட்டார் என்றும், அதற்கு என் அக்கா எனது மச்சானிடம் வெளியூருக்கு வேலைக்கு போய் விடுகிறீர்களா என்று கேட்டார் என்றும், அதற்கு என் மச்சான் என் அக்காவிடம் ஆடு, மாடுகளை விட்டுவிட்டு நான் மட்டும் வெளியூருக்கு எப்படி போக முடியும், பிள்ளைகளை வைத்து நீதான் கஷ்டப்படுவாய் என்று என் அக்காவிடம் சொன்னார் என்றும், அதற்கு என் அக்கா, என் மச்சானிடம் சரி கவனமாக இருங்கள் என்று சொல்லியிருந்தார் என்றும், இந்நிலையில் 25.03.2022 ஆம் தேதி வீரவாஞ்சிநகர் 9 வது தெருவில் உள்ள என் அக்காவிற்கு சொந்தமான இடத்தில் மாட்டுதொழுவத்தில் பால் கறப்பதற்கு எனது அக்காவும், மச்சான் மணியும் வந்திருந்தபோது, அப்போது பால் சட்டி கீழே விழும் சத்தமும், எனது அக்கா அலறல் சத்தமும் கேட்டதும் என்றும், நான் திரும்பி பார்த்தபோது எனது அக்காவின் மேற்கிலிருந்து சாட்சி சுடலைபாண்டி எனக்கு சொல்லி தெரிந்த பாளையங்கோட்டை குலவணிகர்புரத்தை சேர்ந்த முருகன் மகன் 1ம் எதிரி சூர்யதினேஷ் கையில் அரிவாளுடனும், மாட்டுத்தொழுவத்திற்கு கிழக்கிலிருந்து பார்த்தால் அடையாளம் காட்டக்கூடிய ஒருநபர் கையில் அரிவாளுடனும் ஓடிவந்தார்கள் என்றும், அதை பார்த்த எனது மச்சான் அவர்களிடமிருந்து தப்பிக்க ஓடியுள்ளார் என்றும், அப்போது

மேற்கிலிருந்து வந்த சூர்யதினேஷ் கையில் வைத்திருந்த அரிவாளால் எனது மச்சான் மணியை முதலில் வெட்டினார் என்றும், எனது மச்சான் அந்த வெட்டை இடது கையால் தடுத்ததும், அவரது இடது கை மணிக்கட்டிற்கு மேல் வெட்டுப்பட்டு துண்டாகி கீழே விழுந்தது என்றும், மறுபடியும் அவன் வெட்டும்போது எனது மச்சான் வலது கையால் தடுத்தபோது மாறி மாறி வலது கையில் வெட்டினார் என்றும், அப்போது கிழக்கிலிருந்து வந்த நபர் கையில் வைத்திருந்த அரிவாளால் எனது மச்சானின் தலை, கழுத்து, தோள்பட்டை ஆகிய இடங்களில் மாறி மாறி வெட்டினார் என்றும், எனது மச்சான் இரத்தம் சிந்தி நாங்கள் புதியதாக கட்டிக்கொண்டிருக்கும் கட்டிடத்தின் வடக்குப்பக்கம் மாட்டுத்தொழுவத்தின் அருகே விழுந்துவிட்டார் என்றும், என் அக்கா மேற்படி நபர்களின் காலைப்பிடித்து தனது கணவரை வெட்டாதீர்கள், வெட்டாதீர்கள் என்று கெஞ்சினார் என்றும், அதையும் மீறி வெட்டி எனது மச்சானை கொன்றுவிட்டார்கள் என்றும், நான் தடுக்க சென்றால் எதிரி சூர்யதினேஷ் என்னையும் அடையாளம் கண்டு என்னையும் வெட்டி கொன்றுவிடுவான் என்று பயந்து ஒளிந்துகொண்டு கோவில்பட்டி மேற்கு காவல்நிலையத்திற்கு தகவல் சொல்லிவிட்டு எனது உறவினர்களை கூப்பிட எங்கள் தெருவிற்கு சென்று எனது உறவினர்களுக்கு தகவல் சொல்லிவிட்டு அழைத்து வருவதற்குள் போலீசார் வந்து எனது மச்சானின் இறந்த உடலை தனியார் ஆம்புலன்சில் ஏற்றிக்கொண்டு கோவில்பட்டி அரசுமருத்துவமனைக்கு கொண்டு சென்றார் என்றும், எனது அக்கா, மச்சான் குடும்பத்திற்கு உய்க்காட்டான் குடும்பத்தை தவிர வேறு எதிரிகள் யாரும் கிடையாது என்றும், அவர்கள்தான் எனது மச்சான், அவரது மகனை கொலை செய்த நபர்களை எல்லோரையும் கொன்றுவிட்டு மீதியிருந்த எனது மச்சானை கடைசியாக நோட்டமிட்டு கொலை செய்துவிட்டார்கள் என்றும், நானும், எனது உறவினர்களும் சுடலைபாண்டி, மாரிமுத்து ஆகியோர்களுடன் சேர்ந்து வீரவாஞ்சிநகர் மலைப்பகுதியில் தேடியும் விசாரித்ததில் சூர்யதினேஷ்-ம் அவருடன் வந்தவரும், வீரவாஞ்சிநகர் மெயின்ரோட்டில் நிறுத்தி இருந்த TN76

AH3057 என்ற பதிவெண்கொண்ட பேசன் புரோ பைக்கில் UPMS பள்ளி வழியாக தப்பி சென்றுவிட்டதாக அறிந்தேன் என்றும், அதன்பின் நானும், என்னுடன் வேலை செய்த சுடலைபாண்டி, மாரிமுத்து ஆகியோர்கள் கோவில்பட்டி அரசுமருத்துவமனைக்கு சென்றோம். எனது தங்கையும், அவள் மகள் முத்துபேச்சியும் கோவில்பட்டி மேற்கு காவல்நிலையம் சென்று புகார் கொடுத்துவிட்டு மருத்துவமனைக்கு வந்தார்கள் என்றும், வந்தவர்களிடம் மச்சானை கொலை செய்தவர்கள் 1ம் எதிரி சூர்யதினேஷ் மற்றும் அவருடன் வந்தவரும் என்று சொன்னோம் என்றும், 26.03.2022 ஆம் தேதி கோவில்பட்டி மேற்கு காவல்நிலைய ஆய்வாளர் அவர்கள் எனது மச்சானின் உடலை பிரேத விசாரணை செய்தார்கள் என்றும், அப்போது நானும் உடன் இருந்தேன் என்றும், அப்போது என்னை விசாரிக்கும்போது ஆய்வாளர் அவர்கள் செல்போனில் பதிவு செய்து வைத்திருந்த ஊருக்கு வரும் வழியில் பைக்கில் வந்தவர்கள், போனவர்கள் படங்களை காட்டினார்கள் என்றும், அதில் நான் சுடலைபாண்டி மூலம் அறிந்த சூர்யதினேஷ் போட்டோவை ஒரு பைக்கில் பின்னால் உட்கார்ந்து சென்றதை பார்த்து அடையாளம் காட்டினேன் என்றும், போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளும் நாங்களும் சமாதானம் ஆகிவிட்டபடியினால் அவர்களை காப்பாற்ற வேண்டி உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

<u>குறுக்குவிசாரணை (எதிரிகள்தரப்பில்)</u>

கோவில்பட்டி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நான் சாட்சியம் சொல்ல போகும்போது போலீசார் எவ்வாறு சாட்சியம் சொல்ல வேண்டும் என்றும், என்ன சொல்ல வேண்டும் என்றும் சொல்லிக்கொடுத்ததன்பேரில் சாட்சியமளித்தேன் என்றுசொன்னால் சரிதான்.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District& Sessions Judge,
Thoothukudi.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.**

Case No. S.C. No. 133/2022
Prosecution side witness for P.W.4

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திரு.சுடலைபாண்டி** | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **15.04.2026**
A1, A3, A4 are present. A2, A5, A7 are absent, U/s. 317 Cr.P.C. petition filed and allowed.

**முதல் விசாரணை:-**

நான் கடந்த 30 வருடங்களாக தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி வீரவாஞ்சி நகர் 3 வது தெருவில் குடியிருந்து வருகிறேன். சொந்த ஊர் திருநெல்வேலியில் உள்ள மானூர் ரஸ்தா ஆகும். இந்த வழக்கில் கொலையுண்டு இறந்துபோன மணியை எனக்குதெரியும். அவரது மனைவி பேச்சியம்மாளையும், அ.சா.3 முத்துபாண்டியையும் தெரியும். சாட்சி தம்பானை தெரியாது. நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. மற்ற எதிரிகளான சுபாஷ், இசக்கிதுரை, நம்பிராஜ் ஆகியோர்களை தெரியாது. மணி கொலை வழக்கு சம்மந்தமாக எனக்கு என்ன தெரியும், நான் என்ன நேரில் பார்த்தேன் என்றால் நான் வீரவாஞ்சிநகர் 9 வது தெருவில் வேலை பார்த்து கொண்டிருந்தேன். அப்போது என் வீட்டிலிருந்து போன் வந்தது. மணி வெட்டிவிட்டதாக தகவல் வந்தது. நான் அங்கு சென்று பார்ப்பதற்குள் பாடியை அரசுமருத்துவமனைக்கு எடுத்து சென்றுவிட்டார்கள்.

அரசுமருத்துவமனையில் சென்று பார்த்தேன், துணியை போட்டு மூடிவைத்திருந்தார்கள். அதனால் அவருக்கு எங்கு எங்கு எல்லாம் காயங்கள் இருந்தது என்று எனக்கு தெரியாது. மணிக்கும், ஆஜர் எதிரிகளுக்கும் எந்த பிரச்சனையும் இருந்ததா என்றால் அது பற்றி தெரியாது. மணி கொலை வழக்கு சம்மந்தமாக எனக்கு என்ன தெரியும் என்று கேட்டால் நான் மணியின் கொலை சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை, நான் உள்ளே சென்று பார்க்கவில்லை, அதனால் எனது மச்சானிற்கு எங்கு எங்கு காயங்கள் இருந்தது என்று எனக்கு தெரியாது. எனது மச்சான் மணி எப்படி இறந்தார், யாரால் வெட்டி கொலை செய்யப்பட்டார் என்றும், எதற்காக வெட்டி கொலை செய்யப்பட்டார் என்று கேள்விப்பட்டனே என்றால் இல்லை. எனக்கு ஒன்றும் தெரியாது. நான் எதையும் நேரில் பார்க்கவில்லை, எதையும் கேள்விப்படவும் இல்லை. எனது மச்சான் கொலை வழக்கு சம்மந்தமாக அடையாள அணிவகுப்பு ஜெயிலில் காண்பித்தேன். இதற்கு முன்பாக எனது மச்சான் கொலை சம்மந்தமாக கோவில்பட்டி கோர்ட்டில் சாட்சியமளிக்க சென்றுள்ளேனா என்றால் சென்றேன். அங்கு என்னிடம் வாக்குமூலம் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையதுதான். அது நான் போட்டதுதான். அந்த கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.5** ஆகும். என்னுடன் கோவில்பட்டி கோர்ட்டிற்கு வந்திருந்தார் என்றால் பேச்சியம்மாள், மற்றும் முத்தையா என்ற முத்துபாண்டியும் வந்திருந்தார். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை. இந்த வழக்கு சம்மந்தமாக வேறு ஒன்றும் தெரியாது, நான் எந்த சம்பவத்தையும் நேரில் பார்க்கவும் இல்லை, கேள்விப்படவும் இல்லை, அதனால் தெரியாது.

**(இந்நிலையில் சாட்சி வாக்குமூலத்திற்கு மாறுபாடாக சாட்சியமளித்ததால், அரசு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி சாட்சி பிறழ் சாட்சியாக கருதபட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன்பேரில் அனுமதிக்கப்பட்டது.)**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலீசார் விசாரித்தார்கள் என்றும், போலீசார் விசாரணையின்போது, கடந்த 2010 ஆம் ஆண்டு என் மச்சான் மணி இருக்கும்போது குத்தகைக்கு விவசாயம் பார்த்த இடத்தை அனைத்தலையூர் கிராமத்தை சேர்ந்த 3ம் எதிரி உய்க்காட்டான் என்பவர் அந்த இடத்தை உரிமையாளரிடம் நிலத்தை கிரையம் பெற்றதாகவும், அதனால் உய்க்காட்டானுக்கும், மச்சான் மணிக்கும் மேற்படி நிலத்தை காலிசெய்வதில் பிரச்சனை ஏற்பட்டு எனது மச்சான் மணியும், அவரது குடும்பத்தார்களும் உய்க்காட்டான் மகன் அய்யாபிள்ளையை கொலை செய்துவிட்டார்கள் என்றும், அதன்பின்னர் உய்க்காட்டான் குடும்பத்திற்கு பயந்து எனது மச்சானும், எனது தங்கையும் வீட்டை காலி செய்து குடும்பத்துடன் எனது அம்மாவின் பூர்வீக ஊரான கோவில்பட்டி வீரவாஞ்சிநகருக்கு மேற்படி முகவரியில் ஒரு வீடு வாடகைக்கு பிடித்து வசித்து வந்தார்கள் என்றும், நான் கொத்த வேலை சம்மந்தமாக மழைத்தண்ணீர் ஓட காம்பவுண்டு கேட்டில் கீழ் வைக்கும் பெரிய சிமெண்ட் பைப் வாங்குவதற்கு கங்கைகொண்டானில் உள்ள 3ம் எதிரி உய்க்காட்டான் கம்பெனிக்கு அடிக்கடி செல்வேன் என்றும், ஆனால் என்னை அவர்களுக்கு யார் என்று தெரியாது என்றும், எனக்கு உய்க்காட்டானையும், அவரது மகன் துரையையும் அடிக்கடி பைப் வாங்க செல்வதால் நன்றாக தெரியும் என்றும், அவர் என்னிடம் எந்த ஊர் உங்களுக்கு என்று கேட்டபோது நான் கயத்தார் என்று சொல்லியிருந்தேன் என்றும், கடந்த 17.12.2021 ஆம் தேதி காலை 10.00 மணியளவில் நான் சிமெண்ட் பைப் வாங்குவதற்கு உய்க்காட்டான் கம்பெனிக்கு சென்று பைப் மாடல்களை பார்த்து கொண்டிருந்தேன் என்றும், கம்பெனியில் 3ம் எதிரி உய்க்காட்டானும் அவரது மகன் துரையும்

இருந்தார்கள் என்றும், அவர்களுடன் வல்லநாட்டை சேர்ந்த தம்பான்என்ற பையனும் இருந்தான் என்றும், அப்போது தம்பானிடம் பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட உய்க்காட்டானின் தங்கை மகன் 1ம் எதிரி சூர்யாதினேஷ் என்பவர் கம்பெனிக்கு வந்து 3ம் எதிரி உய்க்காட்டானிடம் அத்தானை கொன்ற மணி கோவில்பட்டியில்தான் உயிருடன் இருக்கிறான் என்றும், அவனை கொன்றால்தான் நமக்கு பயமும், பெயரும், நம்மீது பயமும் இருக்கும் என்று சொன்னான் என்றும், அதற்கு மேற்படி இருவரும் மணியை நீ கொலை செய், கேஸை நாங்கள் பார்த்துகொள்கிறோம், செலவிற்கு பணம் தருகிறோம் என்று பேசிக்கொண்டிருந்தார்கள் என்றும், நான் அதை கேட்டுவிட்டு கோவில்பட்டிக்கு வந்ததும், மணி வீட்டிற்கு சென்று மணியிடம் மேற்படி விவரத்தை சொல்லிஎச்சரித்தேன் என்றும், மேற்படி மணியும், எனது தங்கையும், மச்சானும் ஆடுகளும், மாடுகளும் வாங்கி அதில் பால் கறந்து விற்று வாழ்ந்து வந்தார்கள் என்றும், பின்னர் கொஞ்சம் பணம் வந்ததும், வீரவாஞ்சிநகர் 9வது தெருவில் ஒரு இடம் வாங்கி ஆட்டுக்கு செட் அமைத்தும், மாடுகளை கட்டி இருந்தார்கள் என்றும், எனது மச்சான் சம்மந்தப்பட்ட கொலை வழக்கு அவர் இறப்பதற்கு 4 வருடங்களுக்கு முன்பு விடுதலையாகிவிட்டது என்றும், உய்க்காட்டான் மகனை கொலை செய்த வழக்கில் சம்மந்தப்பட்ட எனது மச்சானுடன் சேர்ந்த 4 பேர்களை உய்க்காட்டான் மற்றும் அவரின் சகோதரி சுதாவின் மகன் 1ம் எதிரி சூர்யாதினேஷ் ஆகியோர்கள் கொலை செய்துவிட்டார்கள் என்றும், இந்நிலையில் உய்க்காட்டான் மகன் துரையும், சூர்யாதினேஷ்-ம், மீதியிருந்த எனது மச்சானை பழிக்குப்பழியாக கொலை செய்த திட்டமிட்டு கோவில்பட்டி வீரவாஞ்சிநகர் பகுதியில் வந்து அவர்களை பற்றியும், அவர்கள் எங்கு வசித்து வருகிறார்கள் என்பதை பற்றியும் விசாரித்ததாக

சொல்லி எனது தங்கையும், எனது மச்சானும் நானும், அறிந்தேன் என்றும், எனது மச்சான் கொலை செய்யப்பட்டு இறப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு என் தங்கையிடம் எனது மச்சான் சொல்லும்போது எனது மச்சானின் போட்டோவையும், அட்ரஸையும் யாரோ கங்கைகொண்டான் அனைத்தலையூர் உய்க்காட்டன் தங்கை மகன் 1ம் எதிரி சூர்யாதினேஷ்க்கு கொடுத்ததாக தகவல் அறிந்து என் தங்கையிடம் எனது மச்சான் சொன்னார் என்றும், அதிலிருந்து உய்க்காட்டான் குடும்பத்தினர் மச்சானை ஏதோ செய்ய போகிறார்கள் என்று என் தங்கையிடம் சொல்லி வருத்தப்பட்டார் என்றும், அதற்கு என் தங்கை எனது மச்சானிடம் வெளியூருக்கு வேலைக்கு போய் விடுகிறீர்களா என்று கேட்டார் என்றும், அதற்கு என் மச்சான் என் தங்கையிடம் ஆடு, மாடுகளை விட்டுவிட்டு நான் மட்டும் வெளியூருக்கு எப்படி போக முடியும், பிள்ளைகளை வைத்து நீதான் கஷ்டப்படுவாய் என்று என் தங்கையிடம் சொன்னார் என்றும், அதற்கு என் தங்கை, என் மச்சானிடம் சரி கவனமாக இருங்கள் என்று சொல்லியிருந்தார் என்றும், இந்நிலையில் நானும், பேச்சியம்மாள் தம்பி முத்தையா மற்றும் மாரிமுத்து ஆகியோர்கள்கொத்தனார் கையாள்களுடன் புது வீடு கட்டிக்கொண்டிருக்கும்போது 25.03.2022 ஆம் தேதி மாலை சுமார் 3.30 மணியளவில் வீரவாஞ்சிநகர் 9 வது தெருவில் உள்ள என் தங்கைக்கு சொந்தமான இடத்தில் மாட்டுதொழுவத்தில் பால் கறப்பதற்கு எனது தங்கை பேச்சியம்மாளும், மச்சான் மணியும் பால் கறக்க வந்தார்கள் என்றும், அப்போது திடீரென பால் சட்டி கீழே விழும் சத்தமும், எனது தங்கை பேச்சியம்மாள் அலறல் சத்தமும் கேட்டு பார்த்தபோது எனது தங்கையின் மேற்கிலிருந்து பாளையங்கோட்டை குலவணிகர்புரத்தை சேர்ந்த முருகன் மகன் 1ம் எதிரி சூர்யதினேஷ் கையில் அரிவாளுடனும், மாட்டுத்தொழுவத்திற்கு கிழக்கிலிருந்து பார்த்தால் அடையாளம்

காட்டக்கூடிய உயரமான கொஞ்சம் தடியான கைலியும் சட்டையும் போட்டிருந்த ஒருநபர் கையில் அரிவாளுடனும் ஓடிவந்தார்கள் என்றும், அதை பார்த்த எனது மச்சான் அவர்களிடமிருந்து தப்பிக்க ஓடினார் என்றும், அப்போது மேற்கிலிருந்து வந்த சூர்யதினேஷ் கையில் வைத்திருந்த அரிவாளால் எனது மச்சான் மணியை முதலில் வெட்டினார் என்றும், எனது மச்சான் அந்த வெட்டை இடது கையால் தடுத்ததும், அவரது இடது கை மணிக்கட்டிற்கு மேல் வெட்டுப்பட்டு துண்டாகி கீழே விழுந்தது என்றும், மறுபடியும் அவன் வெட்டும்போது எனது மச்சான் வலது கையால் தடுத்தபோது மாறி மாறி வலது கையில் வெட்டினார் என்றும், அப்போது கிழக்கிலிருந்து வந்த நபர் கையில் வைத்திருந்த அரிவாளால் எனது மச்சானின் தலை, கழுத்து, தோள்பட்டை ஆகிய இடங்களில் மாறி மாறி வெட்டினார் என்றும், எனது மச்சான் இரத்தம் சிந்தி நாங்கள் புதியதாக கட்டிக்கொண்டிருக்கும் கட்டிடத்தின் வடக்குப்பக்கம் மாட்டுத்தொழுவத்தின் அருகே விழுந்துவிட்டார் என்றும், என் தங்கை பேச்சியம்மாள் மேற்படி நபர்களின் காலைப்பிடித்து தனது கணவரை வெட்டாதீர்கள், வெட்டாதீர்கள் என்று கெஞ்சினார் என்றும், அதையும் மீறி வெட்டி எனது மச்சானை கொன்றுவிட்டார்கள் என்றும், அதை பார்த்த முத்தையா பயந்து ஒளிந்துகொண்டு கோவில்பட்டி மேற்கு காவல்நிலையத்திற்கு தகவல் சொல்லிவிட்டு தனது உறவினர்களை கூப்பிட தெருவிற்கு சென்று எனது உறவினர்களுக்கு தகவல் சொல்லிவிட்டு அழைத்து வருவதற்குள் போலீசார் வந்து எனது மச்சானின் இறந்த உடலை தனியார் ஆம்புலன்சில் ஏற்றிக்கொண்டு கோவில்பட்டி அரசுமருத்துவமனைக்கு கொண்டு சென்றார் என்றும், எனது தங்கை, மச்சான் குடும்பத்திற்கு உய்க்காட்டான் குடும்பத்தை தவிர வேறு எதிரிகள் யாரும் கிடையாது என்றும், அவர்கள்தான் எனது மச்சான்,

அவரது மகனை கொலை செய்த நபர்களை எல்லோரையும் கொன்றுவிட்டு மீதியிருந்த எனது மச்சானை கடைசியாக நோட்டமிட்டு கொலை செய்துவிட்டார்கள் என்றும், நானும், எனது உறவினர்களும் முத்தையா, மாரிமுத்து ஆகியோர்களுடன் சேர்ந்து வீரவாஞ்சிநகர் மலைப்பகுதியில் தேடியும் விசாரித்ததில் சூர்யதினேஷ்–ம் அவருடன் வந்தவரும், வீரவாஞ்சிநகர் மெயின்ரோட்டில் நிறுத்தி இருந்த TN76 AH3057 என்ற பதிவெண்கொண்ட பேசன் புரோ பைக்கில் UPMS பள்ளி வழியாக தப்பி சென்றுவிட்டதாக அறிந்தோம் என்றும், அதன்பின் நானும், என்னுடன் வேலை செய்த முத்தையா, மாரிமுத்து ஆகியோர்கள் கோவில்பட்டி அரசுமருத்துவமனைக்கு சென்றோம். எனது தங்கையும், அவள் மகள் முத்துபேச்சியும் கோவில்பட்டி மேற்கு காவல்நிலையம் சென்று புகார் கொடுத்துவிட்டு மருத்துவமனைக்கு வந்தார்கள் என்றும், வந்தவர்களிடம் மச்சானை கொலை செய்தவர்கள் 1ம் எதிரி சூர்யதினேஷ் மற்றும் அவருடன் வந்தவரும் என்று சொன்னோம் என்றும், 26.03.2022 ஆம் தேதி கோவில்பட்டி மேற்கு காவல்நிலைய ஆய்வாளர் அவர்கள் எனது மச்சானின் உடலை பிரேத விசாரணை செய்தார்கள் என்றும், அப்போது நானும் உடன் இருந்தேன் என்றும், அப்போது என்னை விசாரிக்கும்போது ஆய்வாளர் அவர்கள் செல்போனில் பதிவு செய்து வைத்திருந்த ஊருக்கு வரும் வழியில் பைக்கில் வந்தவர்கள், போனவர்கள் படங்களை காட்டினார்கள் என்றும், அதில் நான் சுடலைபாண்டி மூலம் அறிந்த சூர்யதினேஷ் போட்டோவை ஒரு பைக்கில் பின்னால் உட்கார்ந்து சென்றதை பார்த்து அடையாளம் காட்டினேன் என்றும், போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளும் நாங்களும் சமாதானம் ஆகிவிட்டபடியினால் அவர்களை காப்பாற்ற வேண்டி

உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்குவிசாரணை (எதிரிகள்தரப்பில்)

கோவில்பட்டி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நான் சாட்சியம் சொல்ல போகும்போது போலீசார் எவ்வாறு சாட்சியம் சொல்ல வேண்டும் என்றும், என்ன சொல்ல வேண்டும் என்றும் சொல்லிக்கொடுத்ததன்பேரில் சாட்சியமளித்தேன் என்றுசொன்னால் சரிதான். போலீசார் அடையாள அணிவகுப்பிற்கு அழைத்து செல்வதற்கு முன்பாக என்னிடம் மேற்படி எதிரிகளின் போட்டோவை காண்பித்து அவர்களைத்தான் அடையாளம் காண்பிக்க வேண்டும் என்று சொல்லிக்கொடுத்து அழைத்து சென்றார்கள் என்றால் சரிதான்.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District& Sessions Judge,
Thoothukudi.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.**

Case No. S.C. No. 133/2022
Prosecution side witness for P.W.5

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு.மாரிமுத்து | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **15.04.2026**
A1, A3, A4 are present. A2, A5, A7 are absent, U/s. 317 Cr.P.C. petition filed and allowed.

**முதல் விசாரணை:-**

நான் கடந்த 5 வருடங்களாக தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி வீரவாஞ்சி நகர் 5 வது தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கில் கொலையுண்டு இறந்துபோன மணியை எனக்குதெரியும். அவர் எனது அக்கா பேச்சியம்மாளின் கணவர் ஆவார். அ.சா.3 முத்துபாண்டி, அ.சா.4 சுடலைபாண்டி ஆகியோர்களை தெரியும். சாட்சி தம்பானை தெரியாது. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. மற்ற எதிரிகளான சுபாஷ், இசக்கிதுரை, நம்பிராஜ் ஆகியோர்களை தெரியாது. மணி கொலை வழக்கு சம்மந்தமாக எனக்கு என்ன தெரியும், நான் என்ன நேரில் பார்த்தேன் என்றால் நான் வீரவாஞ்சிநகர் 9 வது தெருவில் வேலை பார்த்து கொண்டிருந்தேன். அப்போது என் வீட்டிலிருந்து அண்ணன் போன் செய்தார். மணி வெட்டிவிட்டதாக தகவல் வந்தது. நான் அங்கு சென்று பார்ப்பதற்குள் பாடியை அரசுமருத்துவமனைக்கு எடுத்து

சென்றுவிட்டார்கள். அரசுமருத்துவமனையில் சென்று பார்க்கவில்லை. அதனால் அவருக்கு எங்கு எங்கு எல்லாம் காயங்கள் இருந்தது என்று எனக்கு தெரியாது. மணிக்கும், ஆஜர் எதிரிகளுக்கும் எந்த பிரச்சனையும் இருந்ததா என்றால் அது பற்றி தெரியாது. மணி கொலை வழக்கு சம்மந்தமாக எனக்கு என்ன தெரியும் என்று கேட்டால் நான் மணியின் கொலை சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை, அதனால் எனது மச்சானிற்கு எங்கு எங்கு காயங்கள் இருந்தது என்று எனக்கு தெரியாது. எனது மச்சான் மணி எப்படி இறந்தார், யாரால் வெட்டி கொலை செய்யப்பட்டார் என்றும், எதற்காக வெட்டி கொலை செய்யப்பட்டார் என்று கேள்விப்பட்டனே என்றால் இல்லை. எனக்கு ஒன்றும் தெரியாது. நான் எதையும் நேரில் பார்க்கவில்லை, எதையும் கேள்விப்படவும் இல்லை. எனது மச்சான் கொலை வழக்கு சம்மந்தமாக அடையாள அணிவகுப்பிற்கு நான் செல்லவில்லை. இதற்கு முன்பாக எனது மச்சான் கொலை சம்மந்தமாக கோவில்பட்டி கோர்ட்டில் சாட்சியமளிக்க சென்றுள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை. இந்த வழக்கு சம்மந்தமாக வேறு ஒன்றும் தெரியாது, நான் எந்த சம்பவத்தையும் நேரில் பார்க்கவும் இல்லை, கேள்விப்படவும் இல்லை, அதனால் தெரியாது.

**(இந்நிலையில் சாட்சி வாக்குமூலத்திற்கு மாறுபாடாக சாட்சியமளித்ததால், அரசு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி சாட்சி பிறழ் சாட்சியாக கருதபட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன்பேரில் அனுமதிக்கப்பட்டது.)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரித்தார்கள் என்றும், போலீசார் விசாரணையின்போது, கடந்த 2010 ஆம் ஆண்டு என் மச்சான் மணி இருக்கும்போது குத்தகைக்கு விவசாயம் பார்த்த இடத்தை அனைத்தலையூர் கிராமத்தை சேர்ந்த 3ம் எதிரி உய்க்காட்டான் என்பவர் அந்த இடத்தை உரிமையாளரிடம் நிலத்தை கிரையம் பெற்றதாகவும், அதனால் உய்க்காட்டானுக்கும், மச்சான்

மணிக்கும் மேற்படி நிலத்தை காலிசெய்வதில் பிரச்சனை ஏற்பட்டு எனது மச்சான் மணியும், அவரது குடும்பத்தார்களும் உய்க்காட்டான் மகன் அய்யாபிள்ளையை கொலை செய்துவிட்டார்கள் என்றும், அதன்பின்னர் உய்க்காட்டான் குடும்பத்திற்கு பயந்து எனது மச்சானும், எனது அக்காவும் வீட்டை காலி செய்து குடும்பத்துடன் எனது அம்மாவின் பூர்வீக ஊரான கோவில்பட்டி வீரவாஞ்சிநகருக்கு மேற்படி முகவரியில் ஒரு வீடு வாடகைக்கு பிடித்து வசித்து வந்தார்கள் என்றும், அங்கு வைத்து எனது அக்காவும், மச்சானும் ஆடுகளும், மாடுகளும் வாங்கி அதில் பால் கறந்து விற்று வாழ்ந்து வந்தார்கள் என்றும், பின்னர் கொஞ்சம் பணம் வந்ததும், வீரவாஞ்சிநகர் 9வது தெருவில் ஒரு இடம் வாங்கி ஆட்டுக்கு செட் அமைத்தும், மாடுகளை கட்டி இருந்தார்கள் என்றும், எனது மச்சான் சம்மந்தப்பட்ட கொலை வழக்கு அவர் இறப்பதற்கு 4 வருடங்களுக்கு முன்பு விடுதலையாகிவிட்டது என்றும், உய்க்காட்டான் மகனை கொலை செய்த வழக்கில் சம்மந்தப்பட்ட எனது மச்சானுடன் சேர்ந்த 4 பேர்களை உய்க்காட்டான் மற்றும் அவரின் சகோதரி சுதாவின் மகன் 1ம் எதிரி சூர்யாதினேஷ் ஆகியோர்கள் கொலை செய்துவிட்டார்கள் என்றும், இந்நிலையில் உய்க்காட்டான் மகன் துரையும், சூர்யாதினேஷ்-ம், மீதியிருந்த எனது மச்சானை பழிக்குப்பழியாக கொலை செய்த திட்டமிட்டு கோவில்பட்டி வீரவாஞ்சிநகர் பகுதியில் வந்து அவர்களை பற்றியும், அவர்கள் எங்கு வசித்து வருகிறார்கள் என்பதை பற்றியும் விசாரித்ததாக அவர்களுக்கு அறிமுகமானவர்கள் சொல்லி எனது அக்காவும், எனது மச்சானும் நானும், அறிந்தேன் என்றும், எனது மச்சான் கொலை செய்யப்பட்டு இறப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு என் அக்காவிடம் எனது மச்சான் சொல்லும்போது எனது மச்சானின் போட்டோவையும், அட்ரஸையும் யாரோ கங்கைகொண்டான் அனைத்தலையூர் உய்க்காட்டன்

தங்கை மகன் 1ம் எதிரி சூர்யாதினேஷ்க்கு கொடுத்ததாக தகவல் அறிந்து என் அக்காவிடம் எனது மச்சான் சொன்னார் என்றும், அதிலிருந்து உய்க்காட்டான் குடும்பத்தினர் மச்சானை ஏதோ செய்ய போகிறார்கள் என்று என் அக்காவிடம் சொல்லி வருத்தப்பட்டார் என்றும், அதற்கு என் அக்கா எனது மச்சானிடம் வெளியூருக்கு வேலைக்கு போய் விடுகிறீர்களா என்று கேட்டார் என்றும், அதற்கு என் மச்சான் என் அக்காவிடம் ஆடு, மாடுகளை விட்டுவிட்டு நான் மட்டும் வெளியூருக்கு எப்படி போக முடியும், பிள்ளைகளை வைத்து நீதான் கஷ்டப்படுவாய் என்று என் அக்காவிடம் சொன்னார் என்றும், அதற்கு என் அக்கா, என் மச்சானிடம் சரி கவனமாக இருங்கள் என்று சொல்லியிருந்தார் என்றும், இந்நிலையில் 25.03.2022 ஆம் தேதி வீரவாஞ்சிநகர் 9 வது தெருவில் உள்ள நானும், சுடலைபாண்டியனும், முத்தையாவும் மற்றும் வேலையாட்களும் தங்கம்மாளுக்கு புதுவீடு கட்டிக்கொண்டிருக்கும்போது என் அக்காவிற்கு சொந்தமான இடத்தில் மாட்டுதொழுவத்தில் பால் கறப்பதற்கு எனது அக்காவும், மச்சான் மணியும் வந்திருந்தபோது, அப்போது பால் சட்டி கீழே விழும் சத்தமும், எனது அக்கா அலறல் சத்தமும் கேட்டதும் என்றும், நாங்கள் திரும்பி பார்த்தபோது எனது அக்காவின் மேற்கிலிருந்து சாட்சி சுடலைபாண்டி எனக்கு சொல்லி தெரிந்த பாளையங்கோட்டை குலவணிகர்புரத்தை சேர்ந்த முருகன் மகன் 1ம் எதிரி சூர்யதினேஷ் கையில் அரிவாளுடனும், மாட்டுத்தொழுவத்திற்கு கிழக்கிலிருந்து பார்த்தால் அடையாளம் காட்டக்கூடிய ஒருநபர் கையில் அரிவாளுடனும் ஓடிவந்தார்கள் என்றும், அதை பார்த்த எனது மச்சான் அவர்களிடமிருந்து தப்பிக்க ஓடியுள்ளார் என்றும், அப்போது மேற்கிலிருந்து வந்த சூர்யதினேஷ் கையில் வைத்திருந்த அரிவாளால் எனது மச்சான் மணியை முதலில் வெட்டினார் என்றும், எனது மச்சான் அந்த வெட்டை இடது

கையால் தடுத்ததும், அவரது இடது கை மணிக்கட்டிற்கு மேல் வெட்டுப்பட்டு துண்டாகி கீழே விழுந்தது என்றும், மறுபடியும் அவன் வெட்டும்போது எனது மச்சான் வலது கையால் தடுத்தபோது மாறி மாறி வலது கையில் வெட்டினார் என்றும், அப்போது கிழக்கிலிருந்து வந்த நபர் கையில் வைத்திருந்த அரிவாளால் எனது மச்சானின் தலை, கழுத்து, தோள்பட்டை ஆகிய இடங்களில் மாறி மாறி வெட்டினார் என்றும், எனது மச்சான் இரத்தம் சிந்தி நாங்கள் புதியதாக கட்டிக்கொண்டிருக்கும் கட்டிடத்தின் வடக்குப்பக்கம் மாட்டுத்தொழுவத்தின் அருகே விழுந்துவிட்டார் என்றும், என் அக்கா மேற்படி நபர்களின் காலைப்பிடித்து தனது கணவரை வெட்டாதீர்கள், வெட்டாதீர்கள் என்று கெஞ்சினார் என்றும், அதையும் மீறி வெட்டி எனது மச்சானை கொன்றுவிட்டார்கள் என்றும், அதை பார்த்த எங்களுடன் வேலை செய்த முத்தையா சொந்தக்காரர்களை கூப்பிட்டு வருவதாக கூறி அதே தெருவை பார்த்து ஓடினார் என்றும், என்னையும், என்னுடன் வேலை செய்தவர்களும் பக்கத்து வீட்டில் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தவர்களையும் பார்த்து அந்த இருவரும் அரிவாளை காட்டி மிரட்டிவிட்டு வீரவாஞ்சிநகர் மெயின்ரோட்டை பார்த்து அரிவாளுடன் ஓடினார்கள் என்றும், நாங்கள் அவர்களை பின்தொடர்ந்து பார்த்தபோது வீரவாஞ்சிநகர் மெயின்ரோட்டில் நிறுத்தி இருந்த TN76 AH 3057 என்ற பதிவெண்கொண்ட பேசன் புரோ பைக்கை எடுத்துக்கொண்டு அடையாளம் காட்டக்கூடிய நபர் பைக்கை ஓட்ட எதிரி சூர்யதினேஷ் பின்னால் பைக்கில் உட்கார்ந்து கொண்டும் UPMS பள்ளி வழியாக கிருஷ்ணாநகர் செல்லும் மெயின்ரோட்டில் தெற்காக போய்விட்டார்கள் என்றும், அதன்பின்னர் மணியின் உறவினர்களும், நாங்களும் சேர்ந்து போலீசார் வந்து எனது மச்சானின் இறந்த உடலை தனியார் ஆம்புலன்சில் ஏற்றிக்கொண்டு கோவில்பட்டி

அரசுமருத்துவமனைக்கு கொண்டு சென்றார் என்றும், எனது அக்கா, மச்சான் குடும்பத்திற்கு உய்க்காட்டான் குடும்பத்தை தவிர வேறு எதிரிகள் யாரும் கிடையாது என்றும், அவர்கள்தான் எனது மச்சான், அவரது மகனை கொலை செய்த நபர்களை எல்லோரையும் கொன்றுவிட்டு மீதியிருந்த எனது மச்சானை கடைசியாக நோட்டமிட்டு கொலை செய்துவிட்டார்கள் என்றும், நானும், எனது உறவினர்களும் சுடலைபாண்டி ஆகியோர்களுடன் சேர்ந்து வீரவாஞ்சிநகர் மலைப்பகுதியில் தேடிப்பார்த்தோம் என்றும், அங்கு எதுவும் தென்படவில்லை என்றும், அதன்பின் நானும், என்னுடன் வேலை செய்த சுடலைபாண்டி, ஆகியோர்கள் கோவில்பட்டி அரசுமருத்துவமனைக்கு சென்றோம். எனது அக்காவும், அவள் மகள் முத்துபேச்சியும் கோவில்பட்டி மேற்கு காவல்நிலையம் சென்று புகார் கொடுத்துவிட்டு மருத்துவமனைக்கு வந்தார்கள் என்றும், வந்தவர்களிடம் மச்சானை கொலை செய்தவர்கள் 1ம் எதிரி சூர்யதினேஷ் மற்றும் அவருடன் வந்தவரும் என்று சொன்னோம் என்றும், அப்போது நானும் உடன் இருந்தேன் என்றும், அப்போது என்னை விசாரிக்கும்போது ஆய்வாளர் அவர்கள் செல்போனில் பதிவு செய்து வைத்திருந்த ஊருக்கு வரும் வழியில் பைக்கில் வந்தவர்கள், போனவர்கள் படங்களை காட்டினார்கள் என்றும், அதில் நான் சுடலைபாண்டி மூலம் அறிந்த சூர்யதினேஷ் போட்டோவை ஒரு பைக்கில் பின்னால் உட்கார்ந்து சென்றதை பார்த்து அடையாளம் காட்டினேன் என்றும், போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளும் நாங்களும் சமாதானம் ஆகிவிட்டபடியினால் அவர்களை காப்பாற்ற வேண்டி உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்குவிசாரணை (எதிரிகள்தரப்பில் இல்லை என சொல்லப்பட்டது.)